# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத்துறை

## தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்



"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு." (திருக்குறள் -20)



## ஈரநிலங்கள் என்றால் என்ன?

- ஆண்டு முழுவதுமாக அல்லது பகுதியாக நீரால் சூழப்பட்ட ஒரு நிலப்பகுதி மற்றும்.
- கடல் அலையின் ஆழம் ஆறு மீட்டருக்கு மிகாமல் இருக்கும் கடல் நீர் பகுதிகள் ஆகும்.

## ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017 விதி எண் 2 (g)

- ✶ சதுப்பு நிலம், நீர் சூழ்ந்த நிலம், தாவரம் சூழ்ந்த நிலம் அல்லது நீர் இயற்கையாக அல்லது செயற்கையாக, நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக பாயும் நிலம்.



### ஈரநிலங்களின் வகைகள்

உவர் சதுப்பு நிலங்கள், கடல்புல்வெளிகள், பவளப்பாறைகள், கடல் சார்ந்த ஏரிகள்

சேற்றுப் பகுதிகள், முகத்துவாரங்கள், சிற்றோடைகள், அலையாத்திக் காடு



மிக உயரமான சதுப்புநிலம் மரங்கள் அடர்ந்த சதுப்புநிலம், நீரோடை, புற்கள் அடர்ந்த சதுப்புநிலம்



சதுப்பு நிலம், ஏரிகள், குளங்கள், இயற்கை ஆறுகள்



- ✶ நன் நீர், உவர் நீர் அல்லது உப்பு நீர், கடல் நீரின் பகுதிகள் உட்பட, குறைந்த அலையின் ஆழம் கொண்டது. ஆறு மீட்டருக்கு மேல் மிகாமல் உள்ள பகுதியாகும்.

- ✶ ஆனால் நதிகள், நெல் வயல்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்நிலைகள், குளங்கள் குறிப்பாக குடிநீர் தேவைக்காக கட்டப்பட்டவை, மீன் வளர்ப்பு, உப்பு உற்பத்தி, பொழுதுபோக்கு மற்றும் நீர்ப்பாசன நோக்கங்களுக்காக கட்டப்பட்ட கட்டமைப்புகள் இந்த ஈரநில வரையறைக்குள் வராது.

ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017 பற்றி அறிய ஸ்கேன் செய்யவும்




## ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017
## செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிகள்

<u>பத்தி 3:</u>

a. ராம்சார் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச ஈரநிலங்களின் பட்டியலில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட ஈரநிலங்கள்.

b.மத்திய அரசு மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச விதிகளின் கீழ் அறிவிக்கப்பட்ட ஈரநிலங்கள்.












<u>பத்தி 4:</u>

அனைத்து ஈரநிலங்களும், அவற்றின் இருப்பிடம், அளவு, உரிமை, பல்லுயிர் அல்லது சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள் ஆகியவற்றைப் பொருத்து ஈரநில விதிகளின் கீழ் அறிவிக்கப்படலாம்.

## கீழ்க்கண்ட பயன்பாட்டிற்கு குறிப்பாக மனிதனால் உருவாக்கப்பட்ட :



a. நதி
b. நெல் வயல்கள்
c. நீர்நிலைகள் (குடிநீர் தேவைக்காக)
d. மீன்வளர்ப்பு
e. உப்பு உற்பத்தி
f. பொழுதுபோக்கு
g. நீர்ப்பாசனம்

ஆகியவை ஈரநில வரையறைக்குள் உட்படாது.

பத்தி 5:

★ மனிதர்களால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட பாசன நீர் வழங்குதல், மீன் உற்பத்தி செய்தல், உப்பு உற்பத்தி, பொழுதுபோக்கு, உப்பு தன்மை ஊடுருவலை தடுப்பது, வெள்ளக் கட்டுப்பாடு செய்வது போன்றவை ஈரநில விதிகளின் கீழ் விலக்களிக்கபட்டுள்ளன.

பத்தி 6:

★ ஈரநில விதிகளின் கீழ் இயற்கையான ஈரநிலங்கள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக ஓரளவு அல்லது முழுமையாக பயன்படுத்தபடுகின்றன.



பத்தி 7:

★ ராம்சார் தலங்களாக தகுதி பெற்ற ஈரநிலங்கள் கீழ்கண்ட விதியின் கீழ் அறிவிக்கப்படலாம்

1. இந்திய வனச் சட்டம் 1927ன் படி ஈரநிலங்களை உள்ளடக்கிய பகுதியில் இந்திய வனச் சட்ட விதியின் படி செயல்படும்
2. வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972 ன் படி ஈரநிலங்கள் உள்ளடக்கிய பகுதியில் வனவிலங்கு பாதுகாப்பு சட்டமே செயல்படும்
3. கடற்கரை வரையறுக்கப்பட்ட பகுதி வரையறை 2011ன் படி ஈரநிலங்களை உள்ளடக்கிய பகுதியில் கடற்கரை வரையறை பகுதி சட்டமே செயல்படும்.



## ஈரநிலங்கள் நமக்கு ஏன் முக்கியம்?

- நிலத்தடி நீரை பெருக்கும்.
- இயற்கை நீர் வடிகட்டிகளாக செயல்பட்டு, மாசுக்களை அகற்றுகின்றன.
- வாழ்வாதாரத்தை அதிகரித்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வருமானம் அளிக்கின்றது.
- இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாக்கின்றது.
- புவி வெப்பமயமாதலைக் குறைக்கின்றது.
- மண் அரிப்பைத் தடுக்கின்றது.
- பல்வேறு வகையான உயிரினங்கள் வாழ வழி வகுக்கின்றது.
- கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் முக்கிய இடங்களாக திகழ்கின்றன.
- ஈரநிலங்கள் பொழுதுபோக்கு தலங்களாக உள்ளது.

## ஈரநிலங்களை நாம் எப்படி கவனித்துக் கொள்ள வேண்டும்?

### செய்ய வேண்டியவை



உங்கள் பகுதியில் உள்ள ஈரநிலங்களை பற்றி தெரிந்து கொள்ளுங்கள்



உங்கள் நண்பர்கள் குழுவை ஈரநில நண்பர்களாக பதிவு செய்து ஈரநிலங்களை பராமரிக்க உதவுங்கள்.



உங்கள் சமூகக் குழுக்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.



ஈரநிலங்களில் தன்மையை பார்வையிட்டு நமக்கும் மண்ணிற்கும் மற்ற இதர உயிரினங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை புரிந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள்.

### செய்யக்கூடாதவை



ஈரநிலங்களில் கழிவுகளை கொட்டாதீர்கள்.



பறவைகள் மற்றும் விலங்குகளை வேட்டையாடாதீர்கள்.




இயற்கை தாவரங்களை அழிக்க வேண்டாம்.



ஈரநிலங்களுக்குள் அந்நிய தாவரங்கள் அல்லது விலங்குகளை அறிமுகப்படுத்த வேண்டாம்.

விண்வெளி ஆராய்ச்சி மையம் அகமதாபாத் மூலம் மாவட்ட வாரியாக தேசிய ஈரநில இருப்பு புள்ளி விவரம் 2011ன் படி தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட ஈரநிலங்கள்.





## ஈரநிலத்தின் பயன்பாடுகள் மற்றும் பல்லுயிரிகள்













# ராம்சார் தலங்கள்

## ராம்சார் உடன்படிக்கை:

- ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் அறிவு சார்ந்த முறையான பயன்பாடு தொடர்பான ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் ஆகும். இதுவே ஈரநிலங்களுக்கான உடன்படிக்கை என்றும் அழைப்பதுண்டு.
- 1971 இல் ஈரானில் உள்ள ராம்சார் என்ற நகரில் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நகரின் பெயரை தழுவியே ராம்சார் உடன்படிக்கை என்று பெயர் ஏற்பட்டது.
- ஒரு ஈரநிலமானது ராம்சார் தலமாக தகுதி பெறுவதற்கு 9 நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைக்கு உட்பட்டு ராம்சார் தலங்கள் தேர்வு செய்யப்படுகின்றது.


## நிபந்தனைகள்



1. அரிதான (அ) தனித்தன்மை வாய்ந்த உதாரணங்களுடன் கூடிய இயற்கை (அ) இயற்கை அமைப்புடன் ஒத்த ஈரநிலம்.



2. அழிந்து வரும் (அ) அச்சுறுத்தப்படும் உயிர் சூழியல் சமூகங்களை ஆதரிக்கும் ஈரநிலம்.



3. ஒரு குறிப்பிட்ட உயிர் புவியியல் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை ஆதரிக்கும் ஈரநிலம்.




4. தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கை சுழற்சியில் முக்கியமான கட்டத்தில் ஆதரவு அளிக்கும் ஈரநிலம்.



5. இருபதாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட நீர்பறவைகளை ஆதரிக்கும் ஈரநிலம்.



6. ஒரு தனிப்பட்ட நீர்பறவை இனத்தின் அல்லது துணை இனத்தின் 1% தொகையினை தொடர்ந்து ஆதரிக்கும் ஈரநிலம்.



7. உள்நாட்டு மீன் இனத்தின் (அ) துணை இனத்தின் குறிப்பிடதக்க தொகையை ஆதரிக்கும் ஈரநிலம்.




8. மீன்களின் இனபெருகத்தின் போது முட்டையிடும் நிலமாகவும், இடம்பெயர்வு பாதையாகவும் மற்றும் மீன்களுக்கான உணவுகளை வழங்கும் மூலாதாரமாகவும் இருக்கும் ஈரநிலம்.



9. ஒரு ஈரநிலம் சார்ந்த பறவை அல்லாத விலங்கு இனத்தின் அல்லது அவற்றின் துணை இனத்தின் 1% தொகையினை தொடர்ந்து ஆதரிக்கும் ஈரநிலம்.

# ராம்சார் தலங்கள் தமிழ்நாடு




| வ.எண் | ராம்சார் தலங்களின் பெயர்கள் | பரப்பளவு (ஹெக்) |
|---|---|---|
| 1 | பள்ளிக்கரணை சதுப்புநிலம் காப்புக்காடு (சென்னை ) | 1,247.54 (698 ha R.F) |
| 2 | கரிக்கிலி பறவைகள் சரணாலயம் (செங்கல்பட்டு) | 58.44 |
| 3 | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் (செங்கல்பட்டு) | 40.35 |
| 4 | கழுவேலி பறவைகள் சரணாலயம் (விழுப்புரம் ) | 5151.60 |
| 5 | பிச்சாவரம் அலையாத்தி காடு (கடலூர் ) | 1,478.64 |
| 6 | கரைவெட்டி பறவைகள் சரணாலயம் (அரியலூர்) | 453.7 |
| 7 | வடுவூர் பறவைகள் சரணாலயம் (திருவாரூர்) | 112.64 |
| 8 | உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் (திருவாரூர்) | 43.77 |
| 9 | கோடியக்கரை வன உயிரின மற்றும் பறவைகள் சரணாலயம் (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர்) | 38,500 |
| 10 | காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம்) | 96.89 |
| 11 | சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம்) | 260.47 |
| 12 | மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் (இராமநாதபுரம்) | 52,671.88 |
| 13 | கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் (திருநெல்வேலி) | 72.04 |
| 14 | சுசீந்திரம் – தேரூர்ஈரநில வளாகம் (கன்னியாகுமரி) | 94.23 |
| 15 | வேம்பனூர் ஈரநில வளாகம் (கன்னியாகுமரி) | 19.75 |
| 16 | லாங்வுட் சோலை காப்புக்காடு (நீலகிரி) | 116.007 |
| 17 | நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் (திருப்பூர்) | 125.865 |
| 18 | வெள்ளோடு பறவைகள் சரணாலயம் (ஈரோடு) | 77.19 |
| 19 | தேர்த்தங்கல் பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம்) | 29.295 |
| 20 | சக்கரக்கோட்டை பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம்) | 230.49 |

**மொத்த பரப்பளவு (ஹெக்) = 1,00,880.787**

## ராம்சார் தலத்தின் பயன்பாடுகள்



விவசாயம் - வடுவூர்



மீன்பிடித் தொழில் - கோடியக்கரை



சுற்றுலா - பிச்சாவரம்

## ராம்சார் தலத்தின் பல்லுயிரிகள்



கடல் ஆமை - மன்னார் வளைகுடா



மஞ்சள் மூக்கு நாரை - வேடந்தாங்கல்



வரித்தலை வாத்து - வெள்ளோடு



## ராம்சார் தலங்கள் மாநிலம் வாரியாக

| | |
|---|---|
| 20 | தமிழ்நாடு |
| 10 | உத்திர பிரதேசம் |
| 06 | ஒடிஸா,பஞ்சாப் |
| 05 | மத்திய பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் |
| 04 | குஜராத், கர்நாடகா, ராஜஸ்தான், |
| 03 | இமாச்சலப் பிரதேசம், கேரளா, பீகார், மகாராஷ்டிரா |
| 02 | அரியானா, மேற்கு வங்காளம், இலடாக் |
| 01 | மணிப்பூர், மிசோரம், திரிபுரா, அசாம், கோவா, உத்தரகாண்ட், சிக்கிம், ஜார்கண்ட், ஆந்திரப் பிரதேசம் |

## தமிழ்நாடு



- தமிழ்நாட்டில் மொத்தம் 20 ராம்சார் தலங்கள் உள்ளன.
- 2002ல் - முதல் ராம்சார் தலமாக கோடியக்கரை அறிவிக்கப்பட்டது.
- இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு 2022, 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் முறையே 13, 4 மற்றும் 2 எண்ணிக்கையிலான புதிய ராம்சார் தலங்கள் அறிவிக்கப்பட்டது

## இந்தியா



- ராம்சார் உடன் படிக்கையின் கீழ் இந்தியா 01.02.1982 முதல் உறுப்பினராக உள்ளது.
- இந்தியாவில் மொத்தம் 91 ராம்சார் தலங்கள் உள்ளன.

## உலக நாடுகள்



- ராம்சார் உடன்படிக்கையின் கீழ் மொத்தம் 175 உலக நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.


தமிழ்நாடுமாநில ஈரநில ஆணையம்
எண் 1. ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை,
எட்டாவது தளம், சைதாப்பேட்டை, சென்னை. 15.
Email: tnswa18@gmail.com | Web: www.tnswa.org
கட்டணமில்லா தொலைபேசி எண் 18005997834


ஈரநில நண்பர்கள் குழுவில் இணைய ஸ்கேன் செய்யவும்